# இந்துப்பண்பாட்டுப் புலத்தில் நகர்க்கட்டுமானம் நகரமாதிரியுருக்கள் பற்றிய எண்ணக்கருக்களின் பயில்நிலை

சயனொளிபவன் முகுந்தன்

**ஆய்வுச்சுருக்கம்**

நகர்க்கட்டுமானக்கலை தொடர்பிலான விழிப்புணர்வும் அறிகைக் கையளிப்பும் இந்துப்பண்பாட்டுப் புலத்துக்குப் புதியதல்ல. ஆகமங்கள், வாஸ்து- சில்பசாஸ்திரங்கள் அர்த்தசாஸ்திரம் ஆகியவற்றில் இக்கலையானது முறைசார் அறிவியலாகப் (Formal Science) பிரேரிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் நகர உருவாக்கம் என்பது நன்கு திட்டமிடப்பட்டு அளவுப் பிரமாணரீதியாக முன்னெடுக்கப்பட்டமையினை அறியமுடிகிறது. குடியிருப்பு நோக்கம், வர்த்தக நோக்கம், துறைமுக மற்றும் தொடர்பாடல் நோக்கம், பாதுகாப்பு நோக்கம், பரிபாலன நோக்கம், கல்வி மற்றும் ஆன்மீக மேம்பாட்டு நோக்கம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டன. குறித்த நோக்கங்களுக்கு முன்னுரிமையளித்து நிர்மாணிக்கப்பட்ட நகரங்களுக்கு விசேட காரணச்சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டன. மானசாரம், மயமதம், சில்பரத்தினம், சுக்கிரநீதி ஆகிய நூல்களில் நகர, ராஜதானி துர்க, பட்டினம், கேத, கர்வத, சிபிர, ஸ்தானீய, துரோணமுக, கோடிய-கோளகா, நிகம, மாதா எனப் பன்னிரண்டு வகையான நகரமைப்புக்கள் இவ்வகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. மக்கள் தொகைப்பரம்பல் தரைத்தோற்ற அமைப்பு அனர்த்த முகாமைத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு தண்டகம், சதுர்முகம், சர்வதோபத்திரம், நந்தியா வர்த்தம், பத்மகம், சுவஸ்திகா, பிரஸ்தரம், கார்முகம் ஆகிய எட்டுவித நகர் மாதிரியுருக்கள் முன்மொழியப்பட்டன. நகரத் திட்டமிடலுக்காக வலையங்களை வரையறை செய்யும் போது "பதன்யாச" எனும் அளவீட்டு விதிமுறை பின்பற்றப்பட்டது. வீதிவலைப்பின்னல் வடிகால் அமைப்பு ஆகியவற்றிலும் விசேட கரிசனை செலுத்தப்பட்டது. இத்தகையதோர் பின்னணியில் இந்துப் பண்பாட்டுப் புலத்தில் விரவியிருந்த நகரமைப்புமாதிரிகள் மற்றும் நகர்த்திட்டமிடல் சார்ந்த எண்ணக்கருக்களைப் பொருத்தமான சான்றாதாரங்களுடன் எடுத்துரைப்பதும், பகுப்பாய்வு செய்ய முயல்வதுமே இவ்வாய்வுக் கட்டுரையின் பிரயத்தனமாகும்.

*திறவுச்சொற்கள்: நகர்க்கட்டுமானம், நகர்மாதிரியுருக்கள், இந்துப்பண்பாடு, வாஸ்து - சில்பசாஸ்திரங்கள் மற்றும் வீதிவலைப்பின்னல்*

சமயம், தத்துவம், கலை, இலக்கியம், அரசியல், பொருளியல், நீதிபரிபாலனம், அறிவியல் எனப் பண்பாட்டில் உள்ளடங்குகின்ற பொருண்மைகள் அனைத்தும் இந்துப் பண்பாட்டுக் கற்கைகளில் செறிந்து விரவியுள்ளன. ஆயினும் இந்துப் பண்பாட்டையும் அதுசார்ந்த கற்கைகளையும் சமயத் துறையாக மட்டுமே அடையாளப்படுத்துகின்ற பாங்கு இன்று பொது வெளியில்நிலை பெற்றுள்ளமை துரதிஸ்டவசமான தாகும். கிரேக்க ரோமப் பண்பாடுகளின் தத்துவார்த்த மற்றும் கலைச் செழுமைகளையும், பாரசீகத்தின் கணித வானியற் புலமையினையும் கொண்டாடுகின்ற அறிவுலகம் ஆய்வுத்தளத்தில் நின்று இந்துப் பண்பாட்டின் வகிபங்கினை மதிப்பீடு செய்வதில் அத்துணைபிரயத்தனப்படுவதில்லை. அணுவியலையும், அட்சரகணிதத்தையும், சத்திரசிகிச்சையியலையும், யோகமனவளக்கலையினையும், திரிகோண கணிதத்தையும், வானியற் கணிப்பீடு களையும் முறையாகக் கற்றுத் தேர்ந்து அத்துறைசார்ந்த மூலபாடங்களைக்கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்ட காலத்திலேயே இந்துக்கள் வெளிப் படுத்தியிருந்தனர். இந்துப் பண்பாட்டுப் புலத்தில் நகர்க் கட்டுமானக்கலை தொடர்பிலான எண்ணக்கருக்களும் கிறிஸ்து சகாப்தத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்து கருக்கொண்டு வளர்ச்சி பெற்றிருந்தன. சிந்துசமவெளி நாகரிகத்துக்குரிய தொல்லியற் சான்றுகளின் நம்பகத்தன்மை குறித்த சர்ச்சைகள் நிலவுகின்ற போதிலும் அந்நாகரிகம் அழிவுற்று ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் கருக்கொண்டு நிலைபெற்ற கங்கைச்சமவெளி நாகரிகத் துக்குரியவர்கள் இந்துக்கள் என்பதில் எவருக்கும் மறுப்பிருக்கப் போவதில்லை. அந்தவகையில் காலத்தால் முற்பட்ட ஆகமங்கள், வாஸ்துசில் பசாஸ்திரங்கள் ஆகியவற்றுடன் கௌடில்யரின் அர்த்த சாஸ்திரமும் கங்கைச் சமவெளி நாகரிகத்துக்குரிய இந்துக்களின் நகர்க் கட்டு மானக்கலை பற்றி அறிவதற்குரிய முதன்மை மூலங்களாகத் திகழ்கின்றன.

## நகர வகைப்பாடுகள்

நகரங்கள் அவற்றின் உருவாக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு இந்துப் பனுவல்களில் பலவாறாக வகைப்படுத் தப்பட்டுள்ளன. வர்த்தகநோக்கம், குடியிருப்பு நோக்கம், துறைமுக மற்றும் தொடர்பாடல் நோக்கம், பாதுகாப்பு நோக்கம், பரிபாலன நோக்கம், கல்வி மற்றும் ஆன்மீக மேம்பாட்டு நோக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இத்தகைய துல்லியமான வகைப்பாடுகளை இந்துப்பனுவல்கள் இனங்காட்டியுள்ளன. கிராமங்களின் விருத்தியே நகரம் என்ற நிலைப்பாடு காணப்பட்டதால் கிராமக்கட்டுமானத்துக்கான பொது நியமங்களிலிருந்து மேற்கிளம்பியனவாகவே நகரமைப்பு விதிகளும் காணப்பட்டன. அந்த வகையில் மானசாரம், மயமதம், சில்பரத்தினம், சுக்கிரநீதி ஆகியவற்றைத் துணைக் கொண்டு பன்னிரண்டு வகையான நகரமைப்பு முறைகளை இனங்கண்டு கொள்ள முடிகிறது (MadanLal,1956, p. 25). அவையாவன:

(1)நகர (2) ராஜதானி (3) துர்க
(4) பட்டினம் (5) கேத (6) கர்வத
(7) சிபிர (8) ஸ்தானீய
(9) துரோணமுக (10) கோடிய-கோளகா
(11) நிகம (12) மாதா அல்லது விகார்

இவற்றுள் நகர, புர மற்றும் நாகர ஆகியவை ஒரே வகையின. நிரந்தரமான

பலமான சுற்றுமதில்களைக் கொண்ட வையாக அவை காணப்பட்டன. "புர" என்பது அபிவிருத்தி அடைந்த ஒரு நகரத்தையும், "நகர" என்பது முழுமை யாக அமையப்பெற்ற ஒரு தலைநகரையும் சுட்டுவதாகக் கருதமுடியும்.

*ராஜதானி*

ராஜதானி என்பது சர்வவல்லமை படைத்த பேரரசொன்றின் தலைநகரம் என்று சுக்கிரநீதி குறிப்பிடுகிறது. இதன் மத்தியில் பாரியதொரு சபாமண்டபம் நிர்மாணிக்கப்பட்டிருக்கும்.

*சிபிரா*

சிபிரா எனப்படுவது ஒரு இராணுவ வளாகமாகும் (Military Town). அரசன் புதிதாக வேறொரு நாட்டைக் கைப்பற்றச் செல்லும் தருணத்தில் இது அமைக்கப் படுகிறது. ஹர்ஷவர்த்தன மன்னனின் "ஸ்கந்தவார" பற்றிய பாணபட்டரின் விபரிப்பில் "சிபிரா" வின் பண்புகள் அடையாளங் காட்டப் பட்டுள்ளன. இந் நகரமைப்பில் மையத்தளம் மற்றும் துணைக் கட்டமைவுகள் என இரண்டு பிரதான பகுப்புகள் காணப்படுகின்றன. போர்க்களத்துக்கு அப்பால் இருந்து படையினர் இங்கு தம் பணிகளை மேற்கொள்ளும் விதத்திலும், எந்நேரமும் எதிரிகளின் முற்றுகைகளையும், ஊடுறு ப்புக்களையும் எதிர்கொள்ளும் விதத் திலும்இது கட்டமைக்கப்பட்டிருக்கும்.

*மாதா அல்லது விகாரா*

இது ஒரு பல்கலைக்கழக நகரமாகும். மாணவர்கள் தங்கிக் கற்கும் விடுதிகள், போசனசாலைகள், கல்விக் கூடங்கள், ஆசிரியர்கள், மதகுரு மாருக்கான உறை விடங்கள், பூங்காக்கள், தியான மண்ட பங்கள் எனப் பல்வேறு அம்சங்களைக் கொண்ட வித்யாநகரமாக இது அறியப் படுகிறது.

*கந்மகோலக*

மலைப்பாங்கான அல்லது வனாந் தரமான பகுதியில் கட்டமைக்கப்பட்ட புறநகரமாக இது அடையாளங் காணப் படுகிறது.

மேலும் கார்வாடிக, துரோண முகம், ஸ்தானீயம் ஆகியவை அர்த்த சாஸ்திரம் உள்ளிட்ட அனேக இந்துப் பனுவல்களில் சுட்டப்பட்டுள்ளன. அந்தவகையில் கார்வாடிக என்பது இருநூறு சிறிய கிராமங்களின் மத்தியில் அமையப் பெற்ற புறநகரமாகும். துரோணமுகம் என்பதும் கழிமுகங்களில் உருவான சந்தை நகரமாகும். ஸ்தானீய என்பது 800 கிராமங்களுக்கு மத்தியில் அமையும் ஒரு நிரந்தரத் தலைநகரமாக அறியப்படுகிறது (Kangle,1972, p. 56).

*சப்த கல்பதுருவ*

சப்த கல்பதுருவம் எனும் பிற்காலத் தொகுப்பு நூலில் நகர்க்கட்டுமானத்தைச் சுட்டுகின்ற 10 வகையான ஒத்தகருத்துப் பெயர்கள் சுட்டப்பட்டுள்ளன (Motilal & Dhoj,1932 ). அவையாவன:

(1) கேகம் (2) ஹத்தகிவிசிஷட்ட ஸ்தானம் (3)வாகு கிராமீய விவகார ஸ்தானம் (4) புரி (5)நகர் (6) பட்டினம் (7) ஸ்தானீயம் (8)கடோர்க்கம் (9)பட்டம் நிகம் (10) புடபேதனம்.

இவை பத்தும் புராதன இந்துக்களின் நகர உருவாக்கம் தொடர்பான எண்ணக் கருக்களினைச் சுட்டும் கலைச்சொற்க ளேயன்றி நகரத்துக்கான ஒத்தசொற்கள் அன்று என்பதே ஆய்வாளரின் நிலைப் பாடாகும்.

கேகம்

"கேகம்" என்பது "ஏக்பௌக" எனப்படும் தந்தைத் தலைமைக் குடும்பங்களைக் கொண்டு உருவான மிகச்சிறிய கிராமங்கள் இணைந்து உருவான சிறிய புறநகரத்தைக் குறிக்கும் பதமாகும்.

ஹத்ததிவிசிகூஷ்ட ஸ்தானம், வாகு கிராமீய விவகார ஸ்தானம்

ஹத்ததிவிசிஷ்ட ஸ்தானம், வாகு கிராமீய விவகார ஸ்தானம் என்பவை சந்தைக் கிராமங்களிலிருந்து வளர்ச்சி பெற்ற நகரங்களாகும்.

பட்டினம்

பட்டினம் என்பது வணிகமைய நகரமாகும். முற்குறிப்பிட்ட கிராமிய சந்தை நகரங்களிலிருந்து மிகவும் மேம்பட்ட தன்மையுடையதாக இதனைக் கருத இயலும்.

ஒரு பட்டினத்தின் வளர்ச்சியில் பொருளாதாரப் பரிவர்த்தனைக்குரிய ஊடகமாகப் போக்குவரத்து முதன்மை பெறுகிறது. அந்தவகையில் ஆற்றோரங் கள், கழிமுகங்கள், கடற்கரையோரங்கள் என்பன புராதன இந்துக்களின் துறைமுகப் பட்டினங்களின் உருவாக்கத்தில் முக்கிய பங்கினைப் பெற்றிருந்தன.

நிகம

நிகம என்பதும் ஒரு வகையில் வணிகமையஸ்தானத்தைக் குறித்து நிற்கிறது. இத்தொடர்பில் சம்ஸ்கிருத த்தில் சுட்டப்படும் நகரம் வீடு, கோவில், இடம், அரண்மனை ஆகியவற்றையும் குறித்து நிற்கிறது. இவ்வகையில் மேற்குறிக்கப்பட்ட (குடியிருப்புக்கள், கோயில், அரண்மனை.......) அம்சங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து அவற்றுக்குரிய பொது மற்றும் விசேட தன்மைகளை முதன்மைப்படுத்திக் கட்டமைப்பதே புராதன இந்துக்களின் "நகரம்" குறித்த கருத்தாடலின் அடிப்படையாக இருந்தது.

ஸ்தானீயம், கடோர்க்கம் பட்டம், புடபேதனம்

சப்தகலபதுரு சுட்டியுள்ள ஸ்தானீயம், கடோர்க்கம் பட்டம், புடபேதனம் ஆகிய அனைத்தும் பாதுகாப்பு, நியாயாதிக்கம், ராஜ கௌரவம் ஆகியவற்றுடன் தொடர் புடையவை. அந்தவகையில் இவை கோட் டைகளுடன் கூடிய பெருநகரங்களைக் குறிப்பவை யாகும். இவை குறித்த அரசின் பாதுகாப்பு, நியாயாதிக்கம் ஆகியவற்றுக்கு முதன்மையளித்து உருவாக்கப்படுபவை என்பது தெளிவாகிறது. இன்றைய நிலையில் வைத்து விளக்குவதாயின் இவை நிர்வாகத் தலைநகரங்களாக அர்த்தப்படுகின்றன.

நகரதிசஞானா

நகரதிசஞானா எனும் பனுவலில் ஒரு நகரின் உருவாக்கத்துடன் தொடர் புடைய ஒரே கருத்துடைய ஒன்பது சொற் பிரயோகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன :

(1)நகர (2) மந்திர (3) துர்க (4) புஷ்கர (5) சம்பர்யிக (6)நிவாச (7)சந்தன (8) சத்ம (9) கூடிய மற்றும் க்ஷிதில

புஷ்கர

இவற்றில் புஷ்கர என்பது ஆற்றங்கரைகள் அல்லது கடற்கரைகளில் உருவாக்கப்படும் நகரைக் குறிப்ப தாகவும், சந்தன, கூடிய / ஷிதில ஆகியவை வீட்டைக் குறிப்பதற்குப் பயன்படும் பதங்கள் ஆதலின் வீட்டுத்தொகுதிகளின் சேர்க்கையால்

உருவான நகரங்களைச் சுட்டுவதாகவும் இருக்க இயலும்.

#### துர்க

துர்க என்பது பாதுகாப்புடன் கூடிய நகரம் அதாவது வெறுமனே குடியிருப்பை மையப்படுத்திய நகர்க்கட்டுமானமாக அன்றி அரச தலைநகருடன் தொடர்புடையதாக அமைந்திருக்க வாய்ப்புண்டு. மந்திர் என்பது கோயிலை மையப்படுத்தி வளர்ச்சியுற்ற கோயில் நகரங்களைச் சுட்டப் பயன்பட்ட பதமாகும்.

#### நகரமைப்பு மாதிரியுருக்கள்

குறித்த நோக்கம் அல்லது நோக்கங்களுக்காக ஒரு நகரம் நிர்மாணம் பெறும்பொழுது அந்நகரத்தின் பௌதிகச் சூழல், சமூக பண்பாட்டுச்சூழல் ஆகிய வற்றைக் கருத்திற்கொண்டு கட்டமைக்கப்பட வேண்டும் என்பதில் இந்துப்பனுவல்கள் கரிசனை செலுத்தி யுள்ளன. அந்த வகையில் பல்வேறு விதமான நகரமைப்பு மாதிரிகளை அவை பரிந்துரை செய்துள்ளன. அவற்றுள் மானசாரவாஸ்து சாஸ்திரம், மயமதம் ஆகியவை பரிந்துரைத்துள்ள எட்டுவித மாதிரியுருக்கள் விசேடமானவையாகும். தண்டகம், சதுர்முக, சர்வதோ பத்திரம், நந்தியாவர்த்தம், பத்மகம், சுவஸ்திகா, பிரஸ்தரம், கார்முகம் ஆகியனவே அவையாகும் (Acharya,1927, p. 54). அவற்றில் சதுர்முகம் தவிர்ந்த ஏனைய ஏழுவகை நகர மாதிரிகளை இங்கே பரிசீலனை செய்வது பொருத்தமானதாகும்.

#### தண்டகம் (கோல்வடிவ மாதிரி)

"தண்டக" மாதிரியுருக்கமைய அமைக்கப் படுகின்ற நகரத்தின் முக்கிய சிறப்பம்சம் அதன் வீதி ஒழுங்கமைப்பாகும். வீதிகள் நேராகவும் நகரத்தின் மத்தியில் ஒன்றையொன்று செங்கோணத்தில் இடைவெட்டுவனவாயும் அமையப் பெறுகின்றன. பிரதான வீதிகள் நகரின் கிழக்கு மேற்காயும், வடக்குத் தெற்காயும் நீள்கின்றன. (படம்-1) இதன் நான்கு திசைகளிலும் நான்கு வாயில்கள் அமைகின்றன. வீதிகளின் அகலம் 1 – 5 தண்டம் வரை வேறுபடுகின்றன. நகர் எல்லையின் கடைக்கோடியில் அமைகின்ற குறுக்கு வீதிகளில் குடியிருப்புக்கள் ஒரு மருங்கில் மட்டும் அமைவுறும் வகையில் திட்டமிட்டு உருவாகியமை இங்கு கவனிக்கற்பாலது (Roy, 1973, p. 54). தண்டக மாதிரியுரு நகரமைப்பின் நிர்வாக அலுவலகங்கள் கிழக்குத் திசையில் அமைக்கப்பட்டிருக்கும். ஆலயங்கள் பெரும்பாலும் வடபுறத்தில் அமைவுறுகின்றன.

#### சர்வதோ பத்திரம்

தண்டகம் போல் ஒடுங்கியதாக அன்றி விசாலமான செவ்வக அல்லது சதுரவடிவினதாக அமைக்கப்படும் நகரமைப்பே "சர்வதோ பத்திரம்" ஆகும். (படம்-2) இவ்வமைப்பில் குடியிருப்புக்கள் செறிந்தும், பரந்தும் காணப்படுகின்றன. அனைத்து வகுப்பு மக்களுக்குமான குடியிருப்புக்கள் ஒழுங்கமைக்கப்பட்டிரு ப்பதோடு நகரின் மையப்பகுதியில் பிரதான ஆலயம் அமைக்கப்பட்டிருக்கும் (Ram Raz, 1972, p. 32).

#### நந்தியாவர்த்தம்

பொதுவாக வட்டவடிவில் அமையும் நந்தியாவர்த்த மாதிரியுரு சில சந்தர்ப்பங்களில் சதுரவடிவிலும் அமைவுறும். கிராமங்களை இவ்வுருவில் கட்டமைப்பதில்லை. அந்தவகையில் நகர் நிர்மாணத்துக்கேயுரிய சிறப்பு மாதிரியில் இதுவும் ஒன்றாகும். (படம்-3) இங்கு

3000 - 4000 வீடுகள் வரையில் அமைவுறும். நகரின் மத்தியில் பிரதான தெய்வத்துக்கான பாரிய ஆலயக் கட்டுமானம் ஒன்று அமைக்கப் பட்டிருக்கும். இவ்வாலயக் கட்டுமானத்தை ஒரு பிரதான சுற்று வட்டமாக (Round about) வைத்து நகரின் நான்கு பாரிய வீதிகள் மையத்தில் இணை வுறுகின்றன. இப்பாரிய வீதிகளினை இருமருங்கும் கூர்ங்கோணவடிவில் அனேக கிளை வீதிகள் சந்திக்கின்றன. பிரதான வீதிகளினைக் கிளைவீதிகள் சந்திக்கும் இடைவெட்டுக்களில் குடியி ருப்புக்கள் சாரிசாரியாக நிறுவப் படுகின்றன (Dagens & Bruno,1994, p. 68).

இதனைக் காமிகாகமமும் மயமதம் மற்றும் சில்பரத்தினம் ஆகிய சிற்ப சாஸ்திரங்களும் மங்களகரமான நகர்க் கட்டுமானமாகப் பிரேரித்துள்ளமை கவனிக்கற்பாலது. பிற்காலத்தில் "மதுரை" போன்ற கோயில் நகரங்களின் உருவாக்குகைக்கான ஆதர்ச வடிவமாகவும் நந்தியாவர்த்த மாதிரியுருவைக் கருத இயலும்.

### சுவஸ்திகா

நகரத்திட்டமிடலில் தெருக்களின் வலைப்பின்னலுக்கு மிகுந்த முக்கியத் துவம் கொடுத்து அமைக்கப்படும் பிறிதொரு மாதிரி யுருவாக இதனைக் கருத இயலும். இத்திட்ட வரைபின் பிரகாரம் நகரில் வடக்குத் தெற்காயும், கிழக்கு மேற்காயும் நீளும் இரண்டு பிரதான வீதிகள் நகரின் மையப் பகுதியில் ஒன்றையொன்று செங்குத்தாக இடைவெட்டிச் செல்கின்றன. அதுமட்டு மன்றி ஏனைய குறுக்குவீதிகள்யாவும் இந்நகரின் குடியிருப்புப்பகுதிகளை செவ்வகத்துண்டுகளாகப் பிரிக்கும் விதத்தில் அமைக்கப்பட்டுள்ளன. (படம்-4) இந்நகரமைப்பு பாதுகாப்பு நோக்குடன் சுற்று நெடுமதில் அகழி என்பவற்றைக் கொண்டதாக நிர்மா ணிக்கப்படும். நந்தியாவர்த்த மாதிரியை ப்போல் சுவஸ்திகா உருவும் கிராமங் களை நிர்மாணிக்கப் பயன்படுத்தப்படுவ தில்லை.

### கார்முக

கார்முக நகர் மாதிரி அரைவட்ட வடிவம் / வில்வடிவிலானது. நகரின் பிரதான வீதிகள் வடக்குத் தெற்காகவோ, கிழக்கு மேற்காகவோ நீளுகின்றன. குறுக்குவீதிகள் அவற்றை நேர்கோண த்தில் சந்திக்கின்றன. இதனால் அரை வட்டவடிவிலான குறித்த நகர்ப்பரப்பு முழுமையும் வலைப்பின்னலாக்கப்படு கின்றன. (படம்-5) ஆற்றின் கழிமுகங்கள், கடற்கரை ஓரங்கள் ஆகியவற்றில் கட்ட மைக் கப்படுகின்ற துறைமுக நகரங்கள் கார்முக மாதிரியுருவில் கட்டமைக்கப்பட வேண்டும் என அர்த்தசாஸ்திரம் வலியுறு த்துகிறது (Bose,1978, pp. 24-27). குறைந்தது மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட பிரதான வீதிகள் (ஆறு / கடல்) கரையி லிருந்து விரிந்து செல்லும் வகையில் நகரம் திட்டமிடப்பட்டிருப்பதனால் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்கு அபாயங்களி லிருந்து தப்பித்துக் கொள்வதற்கான கால அவகாசம் நகரவாசிகளுக்கு கிட்டுகிறது. துறைமுகம் தவிர்ந்த பாரிய கட்டு மானங்கள் அனைத்தும் அரைவட்டத்தின் அகன்ற சிறைகளில் (வெளி ஓரங்களில்) நிர்மாணிக்கப் படுவதும் இத்தகைய பாது காப்பு முன்னேற்பாடு கருதியேயாகும். பொதுவாகக் கார்முக மாதிரியுருவிலான நகரமைப்பின்போது பெண் தெய்வத்துக் கான ஆலயம் ஒன்று வசதியான இடத்தில் அவசியமாக இடம்பெற வேண்டுமென இந்துசாஸ்திரங்கள் வலியுறுத்தியுள்ளன.

### பிரஸ்தரம்

ஏனைய நகரமைப்பு மாதிரி களுடன் ஒப்பிடும் போது பிரஸ்தர மாதிரியில் வீதிகள் மிக விசாலமானவை. இங்கே சமூக அடுக்கமைவுக்கேற்பக் குடியிருப்புப் பகுதிகள் தரம் பிரிக்கப்பட்டுள்ளன (படம்-6) மிகச் செல்வந்தருக்கான குடியிருப்புப்பகுதிகள் அளவில் பெரியவை. குடியானவருக்கு ஒதுக்கப் பட்ட நிலத்துண்டுகள் மிகச் சிறியவை. பிரஸ்தர மாதிரியுருவில் நகரங்கள் சதுரமாகவோ அன்றிச் செவ்வக வடிவிலோ அமைய இயலும். ஆனால் வட்டம் மற்றும் முக் கோணவடிவில் இவை அமைய இயலாது.

### பத்மகம்

நன்கு விஸ்தரிக்கப்பட்ட பேரரசு ஒன்று தனது தலைநகரைப் புதிதாகக் குறித்ததோர் இடத்தில் நிறுவுவதற்குத் திட்டமிடும்பொழுது அதற்குப் "பத்மக" மாதிரியுரு மிகவும் ஏற்றதாகும். மத்தியிலிருந்து வெளிப்புறங்களை நோக்கி விரிவடைகின்ற தாமரை இதழ்களின் அமைப்பை ஒத்தவகையில் இது அமைகிறது. மையத்திலிருந்து விளிம்பை நோக்கிய நிலையில் பல தளங்களில் பாதுகாப்பு அரண் களையும், கோட்டைகளையும் உள்ளடக்கிய இவ்வமைப்புருவானது மையத்தினை எந்த விதத்திலும் விஸ்தரிக்க இயலாத மூடிய நகர்கட்டுமானமாகவே திகழ்கிறது. (படம்-7)

### சில பொதுப்பண்புகள்

அரசியல் மற்றும் மரபுசார் வழக்கங்களின் அடிப்படையில் நகர்கட்டு மானத்துக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட முழுப்பிரதேசமும் வலயங்களாகப் பிரிக் கப்படும். இவற்றின் அடிப்படையிலேயே அரச மாளிகைகள், சபா மண்டபம், சந்தைகள், பெருந்தெருக்கள் மற்றும் வீதிகளின் வலைப்பின்னல், பூங்காக்கள், கோயில் கள், கிணறுகள், கட்டுக்குளங்கள் ஆகியவை நிர்ணயிக்கப்பட்டன.

குடியிருப்புத் தொகுதிகளை அமைக்கும் போது குடியிருப்பாளரின் தொழில் கவனத்திற் கொள்ளப்பட்டது. நகரத் திட்டமிடலுக்காக வலையங்களை வரையறை செய்யும்போது "பதன்யாச" எனும் அளவீட்டு விதிமுறை பின்பற்றப் பட்டது.

நகரமைப்பின் போது பிரதான வீதிகள் எட்டுத்தண்டங்கள் அகலமானவை யாகவும், ஏனைய வீதிகள் நான்கு தண்டங்கள் அகலமானவையாகவும் உருவாக்கப்படுவது இன்றியமையாதென இந்து சாஸ்திரங்கள் வலியுறுத்தியுள்ளன (Kangle,1972, p. 68).


மேலும் குடியிருப்புக்களில் *10* வீடுகளுக்கு *1* கிணறாவது இருக்கும் வகையில் பார்த்துக் கொள்ளுதல் இன்றியமையாத தாகும். நகரைச் சுற்றி இருக்கும் பாதுகாப்பு மதில் ஆறு தண்டங்கள் உயரமானதாகவும், பன்னிரண்டு தண்டங்கள் அகலங்கொண்டதாகவும் அமைதல் வேண்டும் என்று அர்த்தசாஸ்திரம் குறிப்பிட்டுள்ளது (Kangle,1972, p. 52).

குறித்த நகரத்தில் அமையும் வீட்டின் நிலப்பரப்பானது அது அமைகின்ற காணித்துண்டின் 50 வீதத்துக்கு மேற்படாமல் அமைவதோடு வீட்டின் முன்புறம் அமையும் முற்றமானது அவ்வீடமைந்துள்ள நிலப்பரப்பின் ⅓ பகுதியாகவும், திறந்த வெளியாகவும் இருத்தல் வேண்டும். குறித்த நகரத்தில் குடியமர்கின்ற பல்வேறு வர்க்கத்தினரும் தத்தமக்கு நிர்ணயிக்கப்பட்ட அளவுப் பிரமாணங்களுக்கமைய வாழிடங்களைத் தெரிவு செய்தனர். குறித்த நகரத்திலுள்ள

எல்லா வீடுகளுக்கும் முன்புறத்தில் அரச வீதிகளும், பின்புறத்தில் பல்வேறு சேவைகளுக்குமான ஒழுங்கைகளும் அமைந்திருந்தன. ஒவ்வொரு வீட்டிலிருந் தும் பிரதான வடிகாலமைப்புக்குச் செல்லும் வாய்க்கால்கள் போதுமான சாய்வில் அமைக்கப்பட்டிருந்தன. வீடுகளுக்கு விறாந்தைகளும் நிலமட்டத் திலிருந்து விறாந்தை மட்டம் வரை படி வரிசைகளும் இருந்தன. வாயிற்கதவின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒரு வேதிகா (உயர்த்தப்பட்ட ஆசனம்) அமைந்திருந் தது. வீட்டுக்கு வெளியே தெரு வரையில் ஒற்றையடிப்பாதை அமைக்கப் பட்டு அதன் இருமருங்கும் நன்கு உயரமாக்கி விடப்பட்டிருந்தது (Rangarajan,1992, p. 29).


## நிறைவுரை

நிறைவாகக் குறிப்பிடுவதாயின் நகர்க் கட்டுமானம் தொடர்பிலான எண்ணக் கருக்கள் இந்துப்பண்பாட்டுப் புலத்தில் நன்கு ஒழுங்கமைக்கப் பட்டிருந்த பாங்கை அவதானிக்க முடிகிறது. அவை வெறுமனே ஊகங் களாகவோ சமய நிலைப் புனைவு களாகவோ அமைந்திருக்கவில்லை. மாறாக ஒரு முறைசார் அறிவியலுக்கே உரித்தான பயில் நிலையுடன் கட்டுருவாக்கப் பட்டிருந்தமையினை பண்டைய இந்துப்பனுவல்களின் வழியே கண்டுணர முடிகிறது.








படம்- 5



படம் -6





படம் - 7

## References

Acharya,R. K. (1927). Indian Architecture According to Manasara-Silpasastra, Oxford University Press, Calcutta.

Bose, P. N. (1978). Principles of Indian Silpasastra. Bharatiya Publishing House, Delhi.

Dagens & Bruno. (ed). (1994). Mayamatam-Treatise of Housing, Architecture and Iconography.Motilal Banarsidass Publishers, Delhi.

Kangle, R.P. (1972).The Kautilya Arthashastra, Part II.Motilal Banarsidass Publishers, Delhi.

MadanLal, S.K. (1956).Ancient Cities of India. Geetha Publications, Nagpur.

Motilal, D. (1932).Sabda Kalpadruma. Oriental Institute, Baroda.

Ramanathan, S. (2011). Shaping Vibrant Cities. Business Standard India.

Rangarajan, L. N. (1992).Kautilya. The Arthashastra. Penguin Classics, New Delhi.

Raz & Ram. (1972). Essay on the Architecture of the Hindus. Indological Book House, Varanasi.

Roy,V. (1973). Architecture: The Dream and the Plan. Thakar Spink,Calcutta.